2025 அக்டோபர் மாதம் 08 – ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர் : 179/2021

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 08 – ஆம் தேதி புதன்கிழமை 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW2 நபரின் வாக்கு மூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | RW2 – ஜெயப்பிரகாஷ் |
| தந்தை பெயர்: | சபரி |
| ஊர்: | உத்தமபாளையம் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து பகுதி அலுவலகம், உத்தமபாளையம் |
| வயது : | 48 |

தேதி : 08.10.2025.

முதல் விசாரணை: –

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் சாட்சியம் அளிக்க வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய அங்கீகார கடிதம் அசல் **எ.ம.சா.ஆ.9–**ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 02.09.2021ம் தேதி போடிநாயக்கனூர் நகர் காவல்நிலைய குற்ற எண்.1229/2021–ல் சம்பந்தப்பட்ட TN 60 AV 5238 பதிவு எண் கொண்ட ஆட்டோவின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் ஆட்டோ ஓட்டிய ஓட்டுநர் மணிமாறன் என்பவரின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல்

செய்கிறேன், அது **எ.ம.சா.ஆ.10-** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஆட்டோவின் அனுமதிச்சீட்டு **எ.ம.சா.ஆ.11** ஆகவும், தகுதிச்சான்று **எ.ம.சா.ஆ.12** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இந்த விபத்தில் ஈடுபட்ட TN 60 AY 8784 பதிவு எண்கொண்ட இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய இறந்துபோன ஓட்டுநர் ராஜ்குமார் என்பவரின் ஓட்டுநர் உரிமத்தின் நகல் தாக்கல் செய்கிறேன், அது **எ.ம.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எ.ம.சா.ஆ.13 ஓட்டுநர் உரிமத்தில் ராஜ்குமாரின் தந்தை பெயர் பொன்னையன் என்றும், 8/3/46, ராமர் கோவில் தெரு, மேலச்சொக்கநாதபுரம், போடிநாயக்கனூர் தாலுகா என்று முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் அவருக்கு LMV, Batch ஆகியவை நடைமுறையில் இருந்தது.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-**

விபத்தில் இறந்துபோன ராஜ்குமாருக்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். அதேபோன்று ஆட்டோவை ஓட்டிய ஓட்டுநர் மணிமாறன் என்பவருக்கும் விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகனத்தின் அனுமதிச்சீட்டு, தகுதிச்சான்று ஆகியவை நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். அதேபோன்று விபத்து சமயத்தில் ஆட்டோவிற்கு காப்பீடு நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 08.10.2025 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.08 19:14:19 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
08.10.2025